

# வேலைத் தலத்தில் சுரண்டலுக்கு உள்ளாதல்

## நீங்கள் குறைந்த ஊதியம் பெறுகிறீர்கள் என்று நினைத்தால் MWC ஐ தொடர்பு கொள்ளவும்


54 Victoria St,
Melbourne, VIC 3053

mwc@vthc.org.au

03 9659 3516

/mwcvic

@mwcvic

@mwcvic


MIGRANT WORKERS CENTRE

migrantworkers.org.au

## நீங்கள் உங்களுடைய முதலாளியிடம் பேசிய பிறகும், வேலை செய்யும் இடத்தில் நீங்கள் சுரண்டலுக்கு ஆளானால் பின்வருவனவற்றை நீங்கள் செய்யலாம்:

உங்களுடைய சக ஊழியர்களும் உங்களுடைய முதலாளியால் சுரண்டப்பட்டிருக்கிறார்களா என்று அவர்களைக் கேளுங்கள்.

குறிப்பேடு ஒன்றை வைத்துக்கொள்ளுங்கள். உங்களுடைய குறிப்பேட்டில் கீழ்வரும் விடயங்களைக் குறித்துவைத்துக் கொள்வதற்கான பிரிவுகள் இருக்கவேண்டும்:


- நீங்கள் வேலை செய்துள்ள மணித்தியாலங்கள்
- உங்களுடைய வேலை நேரங்களின் திகதி, வேலை துவங்கும் மற்றும் முடிவடையும் நேரங்கள்
- உங்களுடைய வேலை நேரத்தில் நீங்கள் எடுத்துக்கொண்ட ஒய்வு நேரங்களைப் பற்றிய விபரங்கள்

பணியிட நியாய அரச குறைகேட்பாளர்' அல்லது தொழிலாளர் சங்கம்,நீங்கள் வேலை செய்யும் இடத்திற்கு விசாரணைகளுக்காக வந்தால், அவர்கள் சொல்வதைக் காதுகொடுத்துக் கேட்டு அவர்களுடைய அறிவுறுத்தல்களைப் பின்பற்றுங்கள். நீங்கள் வேலை செய்யும் இடத்தில் அவர்களைச் சந்திப்பது உங்களுக்கு சங்கடமாக இருந்தால் அதை அவர்களுக்குச் சொல்லுங்கள், அவர்கள் மாற்று ஏற்பாடுகளைச் செய்வார்கள்.

**நீங்கள் உங்களுடைய முதலாளியிடம் பேசிய பிறகும், வேலை செய்யும் இடத்தில் நீங்கள் சுரண்டலுக்கு ஆளானால், பின்வருவனவற்றை நீங்கள் செய்யலாம்:**
**உங்கள் பணியிடத்திற்கு வெளியே ஒரு பாதுகாப்பான இடத்திற்குச் செல்லுங்கள் (முன்னுரிமை உங்கள் வீடு, அல்லது நண்பரின் வீடு), கீழ்கண்ட நிறுவனங்களை தொடர்பு கொள்ளுங்கள்:**

Migrant Workers Centre: 03 9659 3516
Fair Work Commission: 1300 799 675

உங்களுடைய பெயரைச் சொல்லாமல், அநாமதேயமான முறையிலும் நீங்கள் உதவி நாடலாம் அல்லது உங்களுடைய முதலாளிக்குத் தெரியாமல் உங்களுடைய அடையாளத்தை நீங்கள் வெளிப்படுத்தலாம். கூடிய விரைவில் இதைச் செய்யுங்கள். உங்களுடைய பிரச்சினையை நீங்கள் விளக்கிச் சொல்லும்போது, ‘சுரண்டல்’ மற்றும் ‘புகார் செய்தல்’ சரிபார்ப்பு அட்டவணையில் சொல்லப்பட்டுள்ள தகவல்களை மறக்காமல் சொல்லுங்கள். நிறுவனத்தைப் பற்றிய விசாரணைகளை விரைவாகவும், திறமையாகவும் நடத்த இது அவர்களுக்கு உதவும்.





# வேலைத் தலத்தில் சுரண்டலுக்கு உள்ளாதல்

## சுரண்டலை தடுக்கும் சரிபார்ப்பு அட்டவணை:

நீங்கள் ...
- உங்களுடைய இனம், மதம் அல்லது அரசியல் கருத்துக்களுக்களை முன்னிட்டு வேலைத்தலத்தில் பாகுபாடாக நடத்தப்படுகிறீர்களா?
- நியாயமான விளக்கம் இல்லாமல் வேலையில் இருந்து நீக்கப்பட்டீர்களா?
  - எழுத்து மூலமான வேலை நீக்க அறிவிப்பு ஒன்றை உங்களுடைய முதலாளி உங்களுக்குக் கொடுக்கிறார் என்றால், நீங்கள் எவ்வளவு காலம் வேலை செய்திருக்கிறீர்கள் என்பதைப் பொறுத்து 1 முதல் 4 வாரங்களுக்கு முன்பாக அவர் அதை உங்களுக்குக் கொடுக்கவேண்டும். களவு, மோசடி அல்லது தாக்குதல் போன்ற பாரிய தவறான நடத்தையில் நீங்கள் ஈடுபட்டிருந்தால் இந்த அறிவிப்பை உங்களுக்குக் கொடுக்கமாட்டார்கள்.
- நீங்கள் ஒரு பகுதி நேர அல்லது முழு நேரத் தொழிலாளியாக இருந்தும் விடுப்பு எடுக்க உங்களை அனுமதிக்கவில்லையா? ஊதியத்தோடு கூடிய விடுப்பு எடுத்ததற்கு உங்களுக்கு ஊதியம் தரப்படவில்லையா?
- வேலைத்தளத்தில் உருட்டி மிரட்டப்படுகிறீர்களா, அச்சுறுத்தப்படுகிறீர்களா அல்லது தொல்லைக்கு ஆளாகிறீர்களா?
- பாதுகாப்பற்ற சூழ்நிலையில் வேலை செய்கிறீர்களா?
  - உங்களுடைய முதலாளி உங்களுக்குப் பாதுகாப்பைப் பற்றிய தகுந்த விளக்கங்களைக் கொடுக்கிறார் என்பதை உறுதிப்படுத்துங்கள். பாதுகாப்பிற்கு ஆபத்தை உண்டாக்கக் கூடிய விடயங்கள் எதையும் நீங்கள் பார்த்தால், அதைப் பற்றித் தெரியப்படுத்துங்கள். தொழில்பழகுநர் பயிற்சி அல்லது வேலைப் பயிற்சியில் நீங்கள் இருந்தால் எல்லா நேரத்திலும், உங்களுக்கு மேற்பார்வையாளர் ஒருவர் இருக்கவேண்டியது கட்டாயம்.
- ஊதியம் குறைவாகத் தருகிறார்களா, அல்லது உங்களுடைய முதலாளி உங்களுக்கு ஊதியம் தராமல் இருக்கிறாரா?
- உங்களுடைய விசாவில் அனுமதிக்கப்பட்டுள்ளதை விட அதிகமான மணித்தியாலங்களுக்கு வேலை செய்கிறீர்களா?
- வேலைத்தலத்தில் உங்களுக்கு ஏற்பட்ட காயத்திற்கான நஷ்டஈடு உங்களுக்குத் தரப்படவில்லையா?

## புகாரொன்றைத் தயார்செய்யும் சரிபார்ப்பு அட்டவணை:

உங்களுக்கு தெரியுமா...
- நீங்கள் பணிபுரியும் நிறுவனத்தின் ABN இலக்கம், சட்ட மற்றும் வர்த்தக பெயர் என்னவென்று உங்களுக்கு தெரியுமா? நீங்கள் வேலைக்குச் சேரும்போது உங்களுக்குத் தரப்பட்ட ஆவணங்களில் இந்த விபரங்கள் இருக்கின்றனவா என்று பாருங்கள்.
- பதிவு செய்யப்பட்ட உடன்பாடு அல்லது ஏதேனும் ஒப்பந்தத்தில் நீங்கள் கையொப்பம் இட்டிருக்கிறீர்களா?
- எந்த நிர்ணயிக்கப்பட்ட ஊதியத்தின் அடிப்படையில் உங்களுக்கு ஊதியம் தருகிறார்கள்?
- உங்களுடைய வேலை என்ன என்று தெரியுமா? வேலையில் இருக்கும்போது வழமையாக நீங்கள் செய்யும் வேலைகள் என்ன என்று தெரியுமா?
- உங்களுடைய வேலை நேரங்களைப் பற்றிய குறிப்பேடு மற்றும் சம்பளத்துண்டுகள் உள்ளனவா?
- நீங்கள் சுரண்டலுக்கு ஆளாகிறீர்கள் என்பதற்கான மற்ற ஆதாரங்கள் ஏதும் உள்ளனவா?
- நீங்கள் வேலை செய்யும் நிறுவனம் Pty Ltd, Inc. -ஆ அல்லது Ltd company -ஆ?
- இந்த நிறுவனத்தில் நீங்கள் எவ்வளவு காலம் வேலை பார்த்திருக்கிறீர்கள்?

உங்களுடைய வேலை நிலைமைகளைப் பற்றிப் புகார் செய்வது சிரமம் என்பது எங்களுக்குத் தெரியும். நீங்களும், அநேகமாக உங்களுக்கு அருகிலுள்ள மற்றவர்களும் திருப்திகரம் இல்லாத வேலைச் சூழல்களுக்கு ஆளாகியிருக்கிறீர்கள் என்பதை நிரூபிக்கும் ஆதாரங்களை நீங்கள் கொடுக்கவேண்டியிருக்கும். இருந்தாலும், பிரச்சினைகளைப் பற்றி இந்த முகமைகளுக்கு நீங்கள் புகார் செய்வதால் இந்தக் கடினமான சூழ் நிலையில் உங்களுக்கும் உங்களுடைய சக தொழிலாளர்களுக்கும் அவர்களால் உதவி செய்ய இயலும். உங்களுக்கும், உங்களைச் சுற்றியுள்ள மற்றவர்களுக்கும் இன்னும் நல்ல வேலைத்தல உரிமைகள் கிடைக்க நீங்களும் இந்த முகமைகளும் உதவியாக இருக்கும்!



MIGRANT WORKERS CENTRE
migrantworkers.org.au